**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக) மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு. சா.மார்ஸ்**
**ந.க.எண்.79 /ஒபக / 2019, நாள் : 28.01.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (இடைநிலை) – வேலூர் மாவட்டம் – 2019–20 ஆம் கல்வியாண்டு அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நாட்டமறி மாதிரித்தேர்வு (Aptitude Test) – இணையதளம் வழி – நடத்துதல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.761/ அ1/ஒபக/2019, நாள்.28.01.2020.

------

பார்வையில் காணும் திட்ட ஏற்பளிப்புக் குழுக் கூட்ட நடவடிக்கை ஒப்புதலின்படி Quality Intervention (Secondary) என்ற தலைப்பின் கீழ் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நாட்டமறித் தேர்வு Aptitude Test at School Level நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ATSL 2020 முதன்மைத் தேர்வு ஜனவரி 30,31 மற்றும் 1ந் தேதி ஆகிய மூன்று நாட்களில் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

தேர்வு நேரம்

Session I : காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை

Session II : பிற்பகல் 2.00 மணி முதல் 6.00 மணி வரை

இத்தேர்விற்கான முன்னேற்பாடுகள் மற்றும் மாணவர்கள் பள்ளியிலேயே தேர்வு எழுதுவதற்கு ஏற்ற வகையில் சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் இணையதள வசதியுடன் கணினி வளங்களைத் தயார் நிலையில் வைத்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு:–
ATSL 2020 முதன்மைத் தேர்வு நெறிமுறைகள்

மாவட்ட திட்ட ஒங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்–9.

பெறுநர்:– அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்

## ATSL 2020 முதன்மைத் தேர்வு

### உங்கள் கவனத்திற்கு

-----

- ATSL 2020 முதன்மைத்தேர்வு தேர்வு ஒரு நாளில் 2 Session ஆக நடைபெறும்.
- முற்பகல் Session காலை 9.00 மணி முதல் 1 .00 மணி வரை. பிற்பகல் Session பிற்பகல் 2.00 மணி முதல் 6.00 மணி வரை.
- ஒரு Session க்கு (4 மணி நேரம்) ஒரு வினாத்தாள் Live ஆக இருக்கும்.
- மாணவர் எண்ணிக்கை 60க்கு குறைவாக உள்ள உயர்நிலைப் பள்ளிகள் ஒரு Sessionக்கு 10 மாணவர் வீதமும் 120க்குக் குறைவாக உள்ள மேல்நிலைப் பள்ளிகள் ஒரு Session க்கு 20 மாணவர் வீதமும் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்க வேண்டும்.
- தேர்வு மூன்று நாட்கள் 6 Session நடக்கும்.
- மாணவர் எண்ணிக்கை 60க்கு மேல் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், 120க்கு மேல் உள்ள மேல்நிலைப் பள்ளிகள் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்பவும் கணினி வசதிக்கு ஏற்பவும் **மூன்று நாட்களில் 6 Session க்குள் நடத்தி முடிக்கத் திட்டமிட வேண்டும்.**
- ஒரு Session வினாத்தாள் 4 மணி நேரம் Live ஆக இருக்கும் என்பதால் இப்பள்ளிகள் ஒரு Session க்கு 2 Batches நடத்துவதற்கு ஏதுவாக முன்கூட்டியே திட்டமிட்டால் 6 Sessionக்கு 12 Batch நடத்தலாம்.
- அனுமதிக்கப்பட்ட Session இல் 4 மணி நேரம் உள்ளதால் ஒரு மாணவர் எப்போது தொடங்கினாலும் 90 நிமிடத்திற்குள் முடிக்கும்படியாகத் தொடங்க வேண்டும்.
- தேர்வு நடத்தும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு Log in செய்தல், Online refesh செய்தல் போன்ற Technical உதவி மட்டுமே செய்ய வேண்டும். வினா விடை சார்ந்து எந்த உதவியும் செய்யக் கூடாது.
- கணினிகளைப் போதுமான எண்ணிகையில் வைத்திருக்க வேண்டும். இதற்குக் கீழ்க்காணும் வளங்களைப் பயன்படுத்தலாம்.
    - Hi-Tech Lab
    - Hi-Tech Lab வருவதற்கு முன்னர் இருந்த Computer Lab
    - மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட Laptop.
    - CSR activity மூலம் பெறப்பட்ட கணினிகள்
    - மேல்நிலைப் பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மடி கணினிகள்
    - அதே வளாகத்தில் உள்ள பள்ளிகளில் இருக்கும் கணினிகள்
    - CRC, BRC களில் உள்ள System / Laptop
    - நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள tab.
    - ஆசிரியர்களின் Laptop
- இணைய இணைப்பு (internet), மின்சாரம் ஆகியன தடையில்லாமல் இருக்க தகுந்த முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.